Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழரின் கட்டடக்கலைத் தொழில்நுட்பம் தமிழகக் கோயில் கட்டடக்கலை திருவரங்கம் அரங்கநாதர் கோயில்

26

கௌசல்யா .செ & டாக்டர்.க . நாகேஸ்வரி
தெ .தி .இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
குமரி மாவட்டம் .
kousalyavaithy@gmail .com

**ஆய்வு நோக்கம்:**

இவ்வாய்வின் மூலம் தமிழரின் கட்டடக்கலையை நினைவு கூர்வதும் கோயில்களின் கட்டடக்கலையையும் அவற்றின் சிறப்பையும் அடுத்த தலைமுறைக்காகக் கொண்டு செல்வதும் ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழரின் கட்டடக்கலைத் தொழில்நுட்பம் நமக்கு இலக்கியங்கள்,புராணங்கள்,ஓவியங்கள் மூலமாகவும் நேரடிச் சான்றாகவும் தொல்லியல் ஆய்வுகளின் எச்சம் மூலமாகவும் கிடைக்கப்பெற்றுள்ளன.தமிழர் கட்டடக்கலையின் கோயில் கட்டடக்கலை நமக்குத் தெளிவான சான்று எனலாம்.கோயிலின் உயர்ந்த விமானங்களும் மூர்த்தங்களுக்கேற்ற கருவறை அமைப்பும் சிற்பம் மற்றும் ஓவியம் சார்ந்த பிரகாரங்களும் மதில்களும் தூண்களும் விதானங்களும் பழந்தமிழரின் தொழில்நுட்பத்திற்கும் கலையுணர்விற்கும் ஆதாரமாகக் காட்சி அளிக்கின்றன..பல்வேறு மன்னர்களின் காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதால் பல்வேறு கட்டடக்கலைகளைத் தன்னுள் கொண்டதாகத் திகழ்கிறது அரங்கநாதர் ஆலயம்.கோயில் வெறும் வழிபாட்டுத்தலமன்று,பொதுமக்கள் பயன்பாட்டிற்குமானது என்பது இக்கோயில் வடிவமைப்பின் மூலம் உணரப்படுகிறது.மண்டபங்கள், குளங்கள்,சிற்பங்கள் போன்றவை அக்காலப் பண்பாடு,வாழ்வியல்,கலாச்சாரம் போன்றவற்றை உணர்த்துகின்றன.கல்வெட்டுகள் மூலம் ஒவ்வொரு காலத்திற்கான தகவல்களைப் பெறமுடிகிறது அங்ஙனம் திருவரங்கக்கோயிலின் வடிவமைப்பு கட்டடக்கலை முதலானவற்றைப் பேசுகிறது இக்கட்டுரை.

**திறவுச்சொற்கள்:**

கோயில் கட்டடக்கலை - திருவரங்கம் -ஒன்று முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை.

**முன்னுரை:**

"கல்லிலே கலை வண்ணம் கண்டான்" என்னும் கலையறிவு சார்ந்த தொடருக்கும் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்னும் விஞ்ஞான அறிவு சார்ந்த தொடருக்கும் சான்றாக நிற்பவை ஆலயங்கள்.அத்தகைய ஆலயங்களின் கட்டடக்கலைத் தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பு பற்றியது இக்கட்டுரையின் பொருண்மை. திருவரங்க அரங்கநாதர் கோயிலின் கட்டடக்கலையைப் பகர்கிறது கட்டுரை.

**கோயில் வரலாறு:**

இறைவன் விஷ்ணுவின் அவதாரமான ராமனிடம் இருந்து விபீஷணனுக்குத் தரப்பட்டது திருவரங்கநாதர் திருவுருவச்சிலை என்பது செய்தி.பின்னர் சோழ அரசர்களான தர்மாவர்க்கோலன் மற்றும் கிள்ளிவளவன் ஆகியோரால் கோயில் அமைக்கப்பட்டது என்கிறது வரலாறு.ஒன்றாம் நூற்றாண்டில் உறையூரில் சோழர் ஆட்சி செய்த காலத்தில் அமைக்கப்பட்ட கோயில் இது.பிற அரசர்களின் ஆட்சிக் காலத்தில் பல மாறுபாடுகளைப் பெற்றது.பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை கோபுரம் வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. திருவரங்கத்தில் அரங்கநாதசுவாமி கோவிலின் முக்கிய கோபுரம் திருவரங்கம் கோயிலின் வெள்ளைக் கோபுரம் ஆகும். அரங்கநாதசுவாமி கோவில், இந்துக்களின் முக்கியமான இடமாகவும் மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய கோவில் வளாகத்திற்காகவும் புகழ்பெற்றது.

ஆலய அமைப்பு: திராவிடமுறையில் அமைக்கப்பட்ட ஆலயம் இது. திருவரங்கம், உலகின் மிகப்பெரிய இந்து ஆலயமாகக் கருதப்படுகிறது. இது சுமார் 6,31,000 சதுர மீட்டர் (6,790 சதுர அடி) பரப்பளவும் 4 கிமீ (10,710 அடி) சுற்றளவும் கொண்டது. விஷ்ணுவின் ஒரு சில சுயம்புவான கோவில்களில் திருவரங்கம் கோயில் வளாகம் மிகப் பெரியது மற்றும் 156 ஏக்கர் பரப்பளவில் பரவியுள்ளது.

இது ஏழு பிரகாரங்களை அல்லது அடைக்கலங்களைக் கொண்டுள்ளது.இந்த ஏழு பிரகாரங்களை உடலினை உருவாக்கும் ஏழு கூறுகளாக ;ஏழு யோகா மையங்களாகக் கருதுகின்றனர் ஆய்வாளர்கள்.ஏழு சுற்றுச்சுவரும் ஏழு உலகங்களையும் குறிக்கிறது. இந்த வளாகங்கள், தெய்வீக மண்டபத்தைச் சுற்றியுள்ள தடிமனான பெரிய பெரிய சுவர்களில் உருவாகின்றன.ஐம்பது உப சன்னதிகள் உள்ளன.ஒன்பது குளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**சிறப்புகள்:**

திருவரங்கம் கோவில் வளாகத்தில் 21 கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இராஜகோபுரம் என்று அழைக்கப்படும் கோபுரத்தின் தெற்கு கோபுரம், 236 அடி (73 மீட்டர்) உயரம் கொண்டதும் உலகில் இரண்டாவது மிக உயரமானதுமாகும். இந்த இராஜகோபுரத்தின் கட்டுமானமானது விஜயநகர சாம்ராஜ்யத்தின் அச்சுவே தேவா ராயா ஆட்சியின் போது தொடங்கியது. இருப்பினும், அவரது மரணத்திற்குப் பின் கட்டுமான வேலை நிறுத்தப்பட்டது மற்றும் இராஜகோபுரத்தின் கட்டமைப்பு 400 ஆண்டுகளுக்கு முழுமையடையாததாக இருந்தது. இராஜகோபுரத்தை முடித்து வைக்கும் பணிக்கான பணி ஸ்ரீ அகோபில மடத்தின் 44 வது ஜீயரான ஸ்ரீ வேதாந்த தேசிகா

யாதேந்திர மஹாதீஸ்சனரால் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. 8 வருட காலப்பகுதியில் கட்டுமானம் முடிந்தது. இராஜகோபுரம் 1987 மார்ச் 25 இல் பிரதிஷ்டை செய்யப்பட்டது.மேட்டு நரசிம்மர் சன்னதி அழகிய கட்டடக்கலையின் சான்று.ரங்கநாயகி தாயார் அரங்கனின் உலாவைக்காண கைகள் ஊன்றிக் காணும் கைக்குழி ஓர் அற்புதமே.

**மண்டபங்கள்:**

விஜயநகரப் பேரரசின் காலத்தில் கட்டப்பெற்ற நீண்ட இடைகழியைக் கொண்ட 953 தூண்களைச் சமமான இடைவெளியைக் கொண்ட மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.நாயக்கர் கால மண்டபம் கலைநயம் மிகுந்தது.இது சேஷராயர் மண்டபம் எனப்படும்.வடக்குப்பக்கம் தூண்களைக் கொண்ட இது நான்காம் பிரகாரத்தில் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ளது.தென் பகுதியில் கருடமண்டபம் உள்ளது. இதுவும் நாயக்கர்காலத்ததாகும். தூண்கள் முழுவதும் சிற்பங்கள் நிறைந்துள்ளன. பெருமாளை வணங்கிய நிலையில் கருட சன்னதி அமைந்துள்ளது.முதல் பிரகாரத்தில் அரங்கநாதர் சன்னதியை ஒட்டி கிளி மண்டபம் அமைந்துள்ளது.இது பதினேழாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. மேடையை நடுவில் மட்டும் தாங்கும் யானை முதலான விலங்குகள் சிற்பம் இடம்பெற்றுள்ளது அழகானது .ரங்கவிலாச மண்டபம் மிகப்பெரியது.இராமாயணத்தின் பாலகாண்டப்பகுதியின் சிற்பங்களும் சுவர் ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன.புராணத்தில் சொல்லப்படும் நான்கு தந்த யானைச்சிற்பம் இங்குள்ள சிறப்பாகும்.பதினைந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போன யானை இனம் இது.சுவரோவியங்கள் மூலிகைகளால்,காய்கறிச்சாயத்தால் புராண கதைகளாகவும் தெய்வ உருவங்களாகவும் சிறந்த தொழில் நுட்பத்துடன் படைக்கப்பட்டிருக்கின்றன.இறைவனின் வெம்மையைத் தணிக்கும் நீராழி மண்டபம் திருவரங்கத்தில் அழகாம்.

**பொதுப்பயன்பாடு:**

ஆலயம் வழிபாட்டிற்கு மட்டுமன்றி மக்களின் நாட்டின் தேவைக்கான இடமாகவும் திகழ்ந்திருக்கிறது.இங்கு இடம்பெற்ற 640 கல்வெட்டுகள் ஆயிரம் வருடத்து நாகரிகம்,பொருளாதாரம்,கலாச்சாரம் ஆகியவற்றை விளக்குகின்றன .நிலங்களின் எல்லை,நீர்ப்பாசன வசதி, நிலஅளவு ,வரியமைப்பு,கிராமங்களுக்கு வழங்கப்பட்ட நிலம் போன்ற தகவல்கள் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன.

மக்களின் ஆரோக்கியத்திற்கான சுகாதார நிலையமும் இருந்த தகவல் கூறப்படுகிறது.மழை நீரைச் சேமிப்பதற்காகக் கோயில் குளம் நிறுவப்பட்டிருக்கிறது.சந்திர, சூரிய புஷ்கரிணி என்பது பெயர்.இரண்டு மில்லியன் கொள்ளளவை உடையன.கோயிலைச் சுற்றிலும் பத்து குளங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.மழை நீரை உறிஞ்சுவதற்காக நந்தவனம், மணல் படுகை ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

**கருவறையும் மூர்த்தமும்:**

கருவறையின் அமைப்பு அழகானது. திருவடி முதல் சிரசு வரை வணங்கும் படி நீண்ட கருவறை.

சுண்ணாம்பு, கஸ்தூரி, கற்பூரம் , தேன், வெல்லம் மற்றும் சந்தனம் கலந்த தைலக்காப்பு இறைவனுக்குச் சாத்தப்படுகிறது. மூலவர் அரங்கநாதர் சாளக்கிராமம் என்பதால் தைலக்காப்பு சாத்தப்படுகிறது.

**முடிவுரை:**

இங்ஙனம் திருவரங்கநாதரின் ஆலய அமைப்பு பற்றியும் கட்டடக்கலையின் சிறப்பு பற்றியும் இக்கட்டுரை எடுத்துரைத்தது.